An Interview With Nawal El SaadawiBy Anna Louie Sussman

(www.vice.com)

*''நாம் மூன்று உலகங்களின் வாழவில்லை.. நாம் வாழ்வது ஒரே உலகம்..'' சொல்கிறார் நவல் எல் சாதவி. வடக்கு லண்டனில் இருக்கும் 'போக்கி ராடிகல்' புத்தக நிலையத்திற்கு முன்னால் இருந்த மதிப்பு மிக்கவர்களின் கூட்டம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அரேபியாவைச் சேர்ந்த உலகின் மிகமுக்கியமான வாழும் சிந்தனைவாதிகளில் ஒருவரான சாதவிக்கு விசயங்களை முழுமையாக பார்க்கும் திறன் இருக்கிறது. அவரை தனது செயல்பாடுகளின் மூலம் வரையறுப்பது கடினம் ஏனென்றால் அவர் ஒரு மருத்துவர், ஒரு படைப்பாளி, ஒரு களப்பணியாளார், மட்டுமல்லாமல் அவர் தனது தாய் நாடான எகிப்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நவ-காலனிய மேற்கத்திய அதிகாரச்சூழலில் முடக்கப்பட்ட பெண்களின் உரிமைக்கான போராளியாகவும் இருக்கிறார். மதத்தையும் அரசியலையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகப் பார்க்கும் அவர் அவற்றை அடக்குமுறைக்கான கருவிகள் என வர்ணிக்கிறார். ' நாமெல்லோரும் – எகிப்திலிருந்து இங்கிலாந்து வரை, இந்தியாவிலிருந்து அமெரிக்கா வரை - ''பின் நவீன அடிமை முறைமையின்'' பிடியில் இருப்பவர்கள் என நம்புகிறார்.*

*என்பத்து மூன்று வயதில் தனது வாழ் நாள் அனைத்தையும் இந்த கொள்கைகளுக்காக களப்பணி செய்து வருகிறார். ஆணதிக்கம், மதம் மற்றும் முதலாத்துவ அதிகார அமைப்பை எதிர்க்கும் வகையிலான ஐம்பதாறு புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவரது '1972 மேனுஃபெஸ்ட்டோ', மற்றும் 'பெண்களும் பாலுறவும்' ஆகிய புத்தகங்கள் கவுரவக் கொலைகள், பெண் கந்து சிதைப்பு மற்றும் பலவகை வன்முறைகளை கொண்டுள்ள குறிப்பிட்ட அராபிய இரட்டை நிலை கலாச்சாரங்களை புரட்சிகரமான எண்னங்களால் கேள்விக்குள்ளாக்குகிறது. முஸ்லீம் அமைப்புகளால் இவ்வகையான புத்தகங்களுக்காக கொலை மிரட்டல்களை எதிர் கொண்டுள்ளார். எகித்திய அரசாங்கம் அவரை மருத்துவப் பணியிலிருந்து நீக்கம் செய்தது. இருந்தும் அவர் தொடந்து எழுதவும் கேள்விகளைக் கேட்கவும் செய்கிறார்.*

*இஸ்லாம் பெரும்பாலும் ஊழல் பட்டுவிட்டது, தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. எப்படி என தந்து ' நைல் நதிக் கரையில் இறந்து விட்டார் கடவுள்' (1974)என்கிற புத்தகத்தில் விளக்குகிறார். கணவர்கள், தரகர்கள் மற்றும் பணியாளார்களுக்குப் பெண்கள் ஒரு பொருளைப் போல சொந்தம் கொள்வதற்கும் புணர்வதற்கும் மேலும் சிதைப்பதற்கும் மட்டுமா என தனது 1975 வருட நாவலான 'பெண்கள்:தொடும் தூரத்தில்' வினவுகிறார். தனது ஒளித்து வைக்கப்பட்ட ஏவாளின் முகம்' புத்தகத்தின் மூலம் சட்டம் எல்லோருக்கும் சமமாக இருக்கையில் பெண்கள் ஏன் பர்தா அணிய வேண்டும்,ஏன் ஒற்றைக் குடும்ப முறையை எதிர்ப்பில்லாமல் அமைதியாய் ஒப்புக்கொள்ள வேண்டும் என வாதிடுகிறார்.*

*இந்த மூன்று புத்தகங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் மீள் பதிப்பு மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளுக்காக லண்டனில் இருந்த போது நான் சாதவியைச் சந்தித்தேன். ' நான் இங்கு புத்தகங்களைச் சந்தைப் படுத்த வந்துள்ளேன்.. எனது கொள்கைகளுக்காக இல்லை...' என்றார்.*

*உண்மையில் அவர் இந்த இரண்டுக்காகவும் தான் என்பது அவருடனான கேள்வி பதில் நிகழ்சியில் வெளிப்படையாகத் தெரிகிறது. குறிப்பாக அவரை ஒப்புக் கொள்ளாத மனிதர்களிடம் தனது வாதத் தன்மையால் வெற்றியடையும் போது அது தெளிவாகிறது. அவர் அளவுகடந்த இனிமையானவர் தான் பேசும் நபர்களின் தோள்களை இறுகப் பற்றிக் கொள்கிறார். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை அந்த தொடுதல் மூலம் வகைமைப் படுத்திக் கொள்கிறார். மேலும் அனைவரது பெயர்களையும் ஒரு சிறு காகிதத்தில் குறித்துக் கொள்கிறார் அவரது நினைவுகளுக்காக.*

*சந்தித்த ஐந்தாவது நிமிடத்தில் ' நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா...' என என்னைக் கேட்கிறார். குறிப்பிட்டுச் சொல்லும் படி இல்லை பொதுவாகத்தான் அவர் அவ்வாறு கேட்கிறார். அது ஒரு பெரிய கேள்வி. நான் குறிப்பிடத் தகுந்த நேரம் அமைதியாக இருந்தேன். அவர் மீண்டும் தொடர்கிறார்: இங்கிலாந்தைப் பற்றி எனக்குத் தெரியாது...ஆனால் எகிப்த்தில் நான் எனது மருத்துவமனையை சமீபத்தில் மூடி விட்டேன்... ஏனென்றால் அதிகமான இளைஞர்கள் என்னிடம் வந்து தாம் மன அழுத்ததில் இருப்பதாகக் கூறுகிறார்கள்... இளைய மக்கள் மகிழ்வற்று இருக்கிறார்கள்.. ஏன் தெரியுமா... அமைப்பு முறை சரியில்லை... முதலாலித்துவ,*

*ஆணாதிக்க மற்றும் மதங்களிலால் ஆன அமைப்பு மனிதர்களைக் கொல்கிறது... நாம் மனித சமுதாயத்தில் அல்ல காட்டிற்குள் வாழுகிறோம்... அணு ஆயுத ராணுவ அதிகாரத்தின் கீழ் நாம் இன்னும் அடிமைகளாக இருக்கிறோம்... சந்தைக்கு அடிமையாக... ஆண்கள், பெண்கள், ஏழைகள், இளைஞர், முதியவர் என நாம் அனைவரும் ஒரே குட்டைக்குள் வாழ்கிறோம்... நமக்குத் தேவை ஒரு புரட்சி..."*

*சமீபத்தில் ஒரு புரட்சி நடந்தேறியது 'அரேபிய வசந்தம்' என்ற பெயரில். சாதவி 'அரேபிய வசந்தம்' என அதை அழைக்க விரும்பவில்லை மாறாக ;எகிப்த்திய புரட்சி, துனூசிய புரட்சி' என்றே அழைக்க விரும்பினார். எகிப்த்தின் உறுதியான இடது சாரிக் குரலாகவும் அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் தீவிர எதிர்ப்பாளாராகவும் விளங்கிய அவர் 2011-ல் தாஹிர் சதுக்கத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டார். இருந்தாலும் அவர் இப்பொழுது அந்த புரட்சியை – அதன் விளைவை அடையவில்லை – என ஒப்புக் கொள்கிறார். உண்மையில் முபாரக்கும் முஸ்லிம் சகோதரத்துவமும் வெளியேற்றப் பட்டத, சாதவி ஆதரித்த - குறைந்த பட்சம் மற்ற தலைவர்களை விட - அப்டல் ஃபட்டா எல் சிஸி அதிகாரத்தில் அமர்த்தப் பட்டார். ஆனால் எகித்திய மக்கள் மத அடிப்படைவாதத்திலிருந்து விடுவிக்கப் படவில்லை. போலவே மேற்கிலும்.*

*தனது கையை அருகில் இருந்த தளத்தில் ஓங்கி அடித்தவாறு சொல்கிறார்: 'அரேபிய வசந்தத்தின்' விளைவு என்ன? வெறும் குழப்பம்தான்... இராக், சிரியா மற்றும் லெபனான் சிதறிப் போனது... இந்த சிதறலில் லாபம் அடைந்தவர் யார்...அமெரிக்க – இஸ்ரேலிய திட்டத்தைத் தவிர வேறென்ன இது... அய்க்கிய ஐரோப்பாவும் இணைந்து கொண்டது..." மத்திய கிழக்கில் நடைபெறும் உள் நாட்டுப் போருக்கு இந்த மூன்று அதிகாரமும் காரணம் என்கிறார் சாதவி. "அனைத்து அரசாங்கங்களும் ஒன்று சேர்கிறது – அவைகள் நமக்காக வேலை செய்யவில்லை – மாறாக நமக்கு எதிராக வேலை செய்கிறது. அவர்கள் பிரித்து ஆளும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் அதை பிரிடிஷிலிருந்து பெற்றுக் கொண்டார்கள். 19 ம் நூற்றாண்டின் முடிவுகளிலும் 20 ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரிடிஷ் காலனி அதிகாரம் எகித்தை கிருத்துவ – முஸ்லிம் மதப் பிளவின் விளைவை விரும்பியது. இந்த யுக்தியைத்தான் இன்றைய அமெரிக்க- நவ காலனீயம் எடுத்துக் கொண்டது..."*

*ஒரு வேளை அமெரிக்கா உலகின் அதீத அதிகாரமாய் இருந்தால் – அது அரேபியய உலகை தனியார்படுத்துதல், தாராளச் சந்தை மற்றும் உலகலாவிய வளர்ச்சி என்கிற பெயரில் கடந்த 50 வருடங்களாய் காலனீயப் படுத்தியிருந்தால் ... இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று பார்க்க நாம் வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்..." இதன் விசாலமான பார்வையிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ள முடியாத அள்விற்கு சாதவி தொடர்கிறார், "அதனால்தான் நான் மதங்களைப் பற்றிப் படிக்கிறேன்..." தனது 15 வருடங்களை இஸ்லாம், கிருத்துவம், யூதம் மற்றும் புத்த மதங்களை படிப்பதற்காக செலவிட்டுள்ளதாக சொல்கிறார். " நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்... இந்த ஆண் கடவுள்கள் என்ன சொல்கிறார்கள் ? குர்ஆனையும், புதிய ஏற்பாடையும், டோராவையும் () கீதையையும் நான் ஒப்பீடு செய்து பார்த்தேன்... இதிலிருந்து நான் என்ன கண்டைந்தேன் ? அடிமைத்தனம்! மதம் பெண்களையும் ஏழைகளையும் அடிமைப் படுத்துகிறது... இது முதலாளித்துவத்திற்கும் நிலவுடமைச் சமுதாயத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது...இப்பொழுது அனைத்து மதங்களும் பணம் மற்றும் சந்தையின் அடிப்படையாக அமைந்துள்ளது..." மீண்டும் தனது கையை மேசையின் மீது ஓங்கி அடிக்கிறார்: 'மடத்தனம்.."*

*' நீங்கள் உங்களை ஒரு நாத்திகராகக் கூறிக் கொள்வீர்களா...' எனத் தோராயமாக் கேட்கிறேன். "ஒரு நாதிகனாக இருப்பதற்கு ஒருவர் மதத்தை மறுக்க வேண்டும்... நான் மதத்தை விட்டு வெளியே இருந்தாலும் என்னை ஒரு நாத்திகவாதியாக ஒப்புக் கொள்ள மாட்டேன்... நான் அவர்களையும் நம்பவில்லை இவர்களையும் நம்பவில்லை... அவர்களை நான் ஒரு சமுதாய நிகழ்வுப் போக்கு – மருத்துவம் போல – எடுத்துக் கொள்கிறேன்..." ஒரு மார்க்ஸியவாதியாகத் தன்னை அழைத்துக் கொள்வாரா? சாதவி சொல்கிறார்: சமீபத்தில் கார்டியன் இதழிலிருந்து ஒரு பெண் என்னை பேட்டி எடுத்தார்... தன்னைப் பற்றி நிறைய பேசினார்... அவர் என்னை ஒரு மார்க்ஸியவாதி என அழைத்தார்... எனக்கு இந்த மாதிரியான அடையாளாங்கள் தேவையில்லை... அவை என்னை ஒரு ஆணாதிக்க பெட்டிக்குள் வைத்துவிடுகிறது... மார்க்ஸ் ஒரு ஆண் மேலும் அவர் முற்றிலும் ஒரு ஆணாதிக்கவாதி... முதலாளித்துவம் தொடர்பான சீரமைப்பில் இருந்தார் மாறாக பாலினத்தில் (gender) குருடாகி விட்டார்... ஆகையால் நான் எப்படி ஒரு மார்க்ஸியவாதி ஆக முடியும்... எப்படி?*

*ஒரு வழியாக நாம் முதலாளித்துவத்துக்கு எதிரானவர் என்பதில் நிலை கொள்கிறோம். பின்பு சாதவி அமெரிக்காவில் வடக்கு கரோலினாவில் டியுக் பல்கலைக் கழகத்தில் பேராசியராக இருந்த காலத்தை நினைவு கூர்கிறார். அது 1988 –ல் முபாரக் ஆட்சியில் கிளர்ச்சியாளர்களின் மரணப் பட்டியலின் கடுமையாக புண்பட்டிருந்த காலம். அமெரிக்காவில் அடைக்கலம் பெறுகிறார். 'உலகின் மிக உச்சபட்ச முதலாளித்துவத்தினை எப்படி சமாளித்தீர்கள்…' என்கிறேன். ''அமெரிக்கா என்பது அரசாங்கம் அல்ல… ஐக்கிய ஐரோப்பா போன்றது இது… நீங்கள் அரசாங்கம் அல்ல… நான் எகிப்த்தின் அரசாங்கம் அல்ல…அமெரிக்க மக்கள் மிக அருமையானவர்கள்… சில பல்கலைக் கழகங்கள் மிகவும் முற்போற்கானவை… அமெரிக்காவில் நீங்கள் எதை வேண்டுமானாலும் காண முடியும்… ஒரு தீவிரமான மார்க்ஸியரை … அல்லது ஒரு தீவிர நிலவுடமை முதலாளி என … ஆனால் சில பல்கலைக் கழகங்கள் எனது ஒப்பந்தத்தை பறித்தன, ஏனென்றான் நான் படைப்பாற்றல் பற்றியும் கொள்கை எதிர்ப்பு பற்றியும் போதித்ததால்…''*

*சாதவி 1996 –ல் எகிப்த்து திரும்புகிறார். நான் எகிப்த்தை தவிர எங்கும் வாழ முடியாது… ஏனென்றால் உள்ளிருந்து கொண்டு மாற்றவேண்டும்… மேலும் இது எனது வீடு…'' என்கிறார் சாதவி. எனது நாட்டில் எனக்கு ஒரு பாத்திரம் இருக்கிறது…'' 2004-ல் முபாரக்குக்கு எதிராக போட்டியிடுகிறார். ஆனால் – ஒரு பெண் மற்றும் இடதுசாரியாக இருப்பதால் - கடுமையான பயமுறுத்துதலுக்கு பின் அவர் விலகிக் கொள்கிறார். இன்னும் அவருக்கு அங்கு பயமுறுத்தல் இருக்கிறதா? நிச்சயமாக. '' எனது மொத்த வாழ்க்கையும் அகதியாகவோ, சிறையிலோ அல்லது வீட்டுக் காவலிலோதான் இருந்துள்ளது… நான் எப்பொழுதும் – இன்றைக்குக் கூட விளிம்பு நிலையிலேயே இருத்தி வைக்கப் படுகிறேன்… ஆனால் சமகாலத்தில் எப்பொதையும் விட இளைஞர்களின் ஆதரவு எனக்கு இருக்கிறது… புரட்சிக்கு முன்னாள் எனது புத்தகத்தை படித்து விட்டு என்னிடம் வருவார்கள்… இப்போது அது அதிகரித்திருக்கிறது…''*

*நவல் திரும்பவும் புன்னகைக்கிறார், நான் அவரைக் கேட்கிறேன்: சந்தோசமாக இருக்கிறீர்களா? நிச்சயமாக நான் சந்தோசமாக இருக்கிறேன்…'' மேலும் சொல்கிறார், '' நான் சந்தோசமாக இருக்கிறேன்… ஏனென்றால் நான் எதை விரும்புகிறேனோ அதைச் செய்கிறேன்… உங்களை எனக்கு பிடிக்கவில்லை என்றால், உங்களைப் பிடிக்கவில்லை என்பேன். எனது பதிப்பாளாருடன் சண்டை போட விரும்பினால் அதையும் செய்வேன்… அதனால்தான் நான் சந்தோசமாக இருக்கிறேன்: என்னிடம் ரகசியங்கள் கிடையாது… நான் என்னை வெளிப்படுத்திக் கொள்வதால் சந்தோசமாக இருக்கிறேன்… நான் ஒரு மனோதத்துவ வாதி… மக்கள் ஏன் மன அழுத்தத்தில் இருக்கிறார்கள் தெரியுமா? ஏனென்றால் அவர்கள் தாம் என்ன நம்புகிறோம் என்பதை வெளியில் சொல்ல முடியாதவர்களாய் இருக்கிறார்கள்…''*